
தனி பிரதி ரூ.5/-

ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## 2008 - செப்டம்பர்

ரியர்
அர்ஜுனன்

மரம் 8
கனி 10

# தேவ அன்பு
# The Love of God



மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது. அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தில் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்தில் இருக்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கறை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

*-Betty Burton Choate*

## ஆசிரியர் கடிதம்...

வாசகர்களுக்கு,

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது மாத இதழ் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' ஐ தொடர்ந்து பெற்று பயனடைந்து வருவீர்கள் என்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம். நமது தேசத்திலும் உலமெங்கிலும் கிறிஸ்துவின் வசனம் மகிமைப்பட்டுக் கொண்டு வருவதற்காக கர்த்தரை துதிக்கிறோம். இந்த ஊழியத்தை தாங்குகிற ஜெபிக்கிற அனைத்து கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் நன்றி செலுத்துகிறோம். உங்களுடைய மேலான கருத்துக்களை வரவேற்கிறோம். ஒவ்வொரு மாதமும் இதழை வாசித்த பின்பு மற்றவர்களுக்கும் கொடுங்கள்.

உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிக்கும்
கிறிஸ்துவின் வசன தம்பதியர்
B.Arjunan&Glory

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 செப்டெம்பர் - 2008 கனி - 10


ஆசிரியருரை

## நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டும்

## *Wise unto that which is good,and simple concerning evil*



இவ்விதமாக இருப்போமானால் சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார் என அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதின புத்தகத்தில் 16-ம் அதிகாரம் 20-ம் வசனத்தில் வாசிக்கிறோம். சாத்தானை ஜெயிக்கவேண்டுமானால், இரண்டு காரியங்களை கைக்கொள்ள வேண்டும். ஒன்று நன்மைக்கு ஞானிகளாயும், தீமைக்கு பேதைகளாயும் இருக்கவேண்டும். இரண்டிலுமே ஞானிகளாக இருப்பவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதம் நன்மைக்கு ஞானிகளாக இருக்கவேண்டும் என போதிக்கிறது.

"நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" என்கிறார் பவுல் (கலா.6:9). பொதுவாக நன்மைசெய்கிறவர்கள் நன்மைசெய்து, நன்மைசெய்து என்னத்தைக் கண்டோம் நன்மைசெய்து கெட்டபெயர்தான் வருகிறது என்று சலித்துக்கொள்வார்கள். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மரம் செடி கொடிகளை கவனித்துப் பாருங்கள் அவைகள் பூக்களையும் காய்களையும் கனிகளையும் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன. அவைகளைப் பறிப்பவர்களும் பறித்துக்கொண்டே இருக்கின்றனர். அந்த மரமோ செடியோ கொடியோ தங்களுடைய வேலைகளை செய்யாமல் இல்லை. அது தேவனால் என்னநோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற தவறுவதில்லை, அன்பு வாசகரே, நாம் இதை சிந்திக்கவேண்டும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் மட்டும்

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோய் அந்த வேலையைச் செய்ய தவறிவிடுகிறான். நாம் சோர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். இதிலே விசேஷம் என்னவென்றால் "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்" என்கிறார் (கலா.6:10). பொதுவாக விசுவாசகுடும்பங்களை விசாரிக்க தவறிவிடுகின்றனர். ஏனென்றால் அவர்கள் விசுவாசிகளாயிற்றே என்று நினைத்து அவர்களை சபை ஊழியர்களும், சபை விசுவாசிகளும் சில வேளைகளில் விசாரிப்பதில்லை. விசுவாசகுடும்பத்தார் சபையில் நிலைத்திருக்கும் போது அநேக நன்மைகளை செய்வார்கள். பிதாவாகிய தேவன் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். அதைப்போல நலமான காரியங்களை சபையில் செய்துவரும் விசுவாசகுடும்பங்களை சபையார் விசாரிக்கவேண்டும்.

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக்.1:17). அவர் நல்லோர்மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். ஆனபடியினாலே நம்ஆண்டவர் இயேசுகிறிஸ்து நன்மைசெய்கிற வராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். கிறிஸ்துஇயேசுவுக்குள் மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும் நன்மைசெய்யவும் தானதர்மம்பண்ணவும் மறவாதிருக்கவேண்டும். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார். ஒருவேளை நன்மைசெய்ய அறிந்தும் அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் என்று யாக்கோபு சொல்லுகிறார். ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே நன்மைசெய்கிறதில் ஞானிகளாக இருங்கள்.

"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" (எபே.2:10). நீங்கள் தேவனுடைய சித்தத்தை பூமியில் நிறைவேற்றுகிறவர்களாக இருப்பீர்களானால் நன்மைசெய்ய நாடுங்கள். "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம்

அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாகவைக்கவும் அவர்களுக்கு கட்டளையிடு" என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (1தீமோ.6:17-19). இந்த நல்ல ஆலோசனையை ஒவ்வொரு ஐசுவரியவானும் பற்றிக்கொள்வது அவசியம். நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் மாறவேண்டும். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். நான் நினைக்கிறேன் இவ்வசனத்தை ஒவ்வொரு ஏழைமகனும் பற்றிக்கொள்கிறான். ஏனென்றால் அவனிடத்தில் ஒன்றும் இல்லை. அப்படிஏதாவது இருந்தாலும் அதையும் பங்கிட்டு கொடுத்துவிடுகிறான். எனக்கு ஏன் அளவுக்குமிச்சமாயிருக்கிறது என்று கொடுக்கிறான். ஆனால் ஐசுவரியவான் அப்படியல்ல, வீட்டின்மேல் வீட்டைக் கட்டுகிறான். சொத்துக்களைக் குவித்துவைக்கிறான். ஏன்? எதற்காக? இவைகளை இப்படி குவித்துவைக்கிறான்? வசனம் சொலுகிறது: "பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன?" (பிர.5:11). ஆகையால் இச்செய்தியை வாசிக்கும் அன்பு வாசகரே மேலும், பிரசங்கி சொல்வதைப்போல "மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்" என்கிறான் (பிர.3:12). நீங்கள் உயிரோடிருக்கும் காலங்களில் நன்மைசெய்யுங்கள்.

"நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்கு பேதைகளுமாயிருக்கவேண்டும்" (ரோம.16:19). சிலவேளைகளில் நமக்கு வரக்கூடிய கோபத்தினால் மற்றவர்கள் செய்யும் தீமைக்கு தீமையை செய்துவிடுகிறோம். இது எதைக்காட்டுகிறது நம்முடைய சுபாவகுணத்தைக் காட்டுகிறது. கர்த்தருக்குள் வந்தவுடன் சுபாவம் சாகவேண்டும். நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" என்று பேதுரு எழுதுகிறார் (1பேது.2:3). ஆனபடியினாலே வசனம் என்னபோதிக்கிறதோ

அந்தப்படியாக நம்மை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். தீமைக்கு பேதைகளாக அதாவது அதைப் பற்றி அறியாதவர்களாக இருப்பதே நல்லது. உங்களுக்கு ஒருவர் தீமைசெய்துவிட்டால், "தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து; ஆசீர்வதியுங்கள்" என 1பேது.3:9-ல் வாசிக்கிறோம். உண்மையிலே அவருடைய அழைப்பையும் அவருடைய திட்டத்தையும் நாம் என்னிப்பார்ப்போமானால், தேவன் நம்மை அற்புதமான திட்டத்திற்கு அழைத்திருக்கிறார். அதை நாம் நினைக்கும்போது இவ்வுலககாரியங்கள் தூசியும் குப்பையுமாக இருக்கிறது. நாம் நன்மையானவற்றை அநுபவிக்கப்போகிறபடியால் தீமைசெய்கிறவர்களுக்கு நாம் நன்மையே செய்யவேண்டும். மேலும் பேதுரு சொல்லுகிறார்; "கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்கு சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" என்கிறார் (1பேது.3:16,17). நன்மைசெய்வதினால் ஒருவேளை பாடுகள் உங்களுக்கு வந்தால் அதை சந்தோஷமாக எண்ணுங்கள். நாம் தீமைசெய்து பாடுபடுவதினால் ஒரு நன்மையும் இல்லை. நாம் செய்த தவறுக்கு ஏற்ற துன்பத்தை நாம் அநுபவிக்கிறோம். முதல் நூற்றாண்டு காலத்தில் ஆண்டவருடைய சீஷர்கள் சுவிசேஷத்தினிமித்தம் அநேக பாடுகளை அநுபவித்தனர். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். அதைப்போல இயேசுவின் நிமித்தமாக என்ன பாடுகள் வந்தாலும் சோர்ந்து போகாமல் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் பிரசங்கிக்க ஆயத்தமாகுங்கள்.

நீங்கள் நன்மைக்கு ஞானிகளாகவும், தீமைக்கு பேதைகளாகவும் இருந்தால் "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்" (ரோ.16:20). அநேகர் சாத்தானை ஜெயிக்கமுடியாமல் அவனுக்கு அடிபணிந்துவிடுகின்றனர். பலர் அவன் கொண்டு வரும் மாம்ச இச்சைகளுக்கு கீழ்ப்படிந்து, சத்தியத்தை விட்டு வெகுதூரம் சென்று கர்த்தரை மறுதலித்து

விடுகிறார்கள். சாத்தானை ஜெயிக்கவேண்டுமானால் நீங்கள் கர்த்தரிலும் அவருடைய உபதேசத்திலும் நிலைத்திருக்க வேண்டும். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி.13:15). ஆண்டவர் சாத்தனை ஜெயிப்பார் என்பது முதன் முதலில் தீர்க்கதரிசனமாக சொல்லப் பட்டிருந்தது. அந்தப்படியே சாத்தானை ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஜெயித்தார். எப்படியென்றால்; "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கும் அப்படியானார்" (எபி.2:14,15). பிதாவாகிய தேவன், சாத்தான் என்றும் பிசாசு என்றும் சொல்லப்படும் பாவத்திற்கு அதிபதியானவனை தம்முடைய குமாரன் மூலமாக அவருடைய மரணத்தினாலே அவனை ஜெயித்தார். தேவன் சத்தியபரர் ஆனபடியால் அவர் அவனை சத்தியத்தின்படியே ஜெயித்தார்.

நீங்களும் நானும் அந்த பிசாசை ஜெயிக்கவேண்டுமானால், ஜெபம் மட்டும் போதாது, நாம் நன்மைக்கு ஞானிகளாக இருந்துகொண்டு சோர்ந்துபோகாமல் நன்மைசெய்யவேண்டும். அத்தோடு தீமைக்கு தீமைசெய்யாமல் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆகையால் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கபோகின்றவர்கள் என்ற எண்ணத்தோடு யாவருக்கும் நன்மைசெய்து கிறிஸ்துவின் சுவிசேஷவசனத்திற்கு சாட்சிகளாக, நிருபங்களாக செயல்படவேண்டும். அப்படிச்செய்யும் போது பரலோகத்தின் தேவன், சாத்தானை ஆண்டவர் இயேசுவின் கீழே நசுக்கிப்போட்டதுபோல உங்களுடைய கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். அப்பொழுது நீங்களும் சாத்தானையும் அவன் கொண்டுவரும் சகல பாவத்தையும் ஜெயிப்பீர்கள். "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவான்4:4). இதை விசுவாசிக்கின்றீர்களா? இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? நீங்கள் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாக இருந்து பிசாசையும் அவனால் வரும் பாவத்தையும் ஜெயிக்க தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக!

"நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு" (நீதி.14:22)

# கர்த்தருடைய பந்தியில் யார் பங்குகொள்ளமுடியும்?

## Who Can Partake Of The Lord`s Supper?

*-J.C.Choate*



கர்த்தருடைய திருவிருந்து தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பாக கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்டது (மத்.26:26-28). அவர் அப்பம் தம்முடைய சரீரத்தைக் குறிக்கும் என்றும் பாத்திரம் அல்லது திராட்சபழரசம் தம்முடைய இரத்தத்தில் பங்கு கொள்ளுகிறவர்களை நினைவுறுத்துகிறதாக இருக்கும் என்றும் கூறினார். மேலும் அவர் தாம் பிதாவின் ராஜ்யம் அல்லது சபையில் தம்முடைய சீஷர்களோடு கூட பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதை பானம் பண்ணுவதில்லை என்றும் சொன்னார்.

நினைவுகூருதலாகிய இந்த பந்தியில் யார் பங்குகொள்ளுவார்கள்? கிறிஸ்துவின் சீஷர்கள், கிறிஸ்தவர்கள், தம்முடைய ராஜ்யத்தின் அதாவது சபையின், குடும்பத்தின் அங்கத்தினர்கள் (அப்.2:38,47). வாரத்தின் முதல் நாளிலே,.... ஞாயிற்று கிழமையிலே, கர்த்தருடைய நாளிலே நாம் கூடி வருகிற வேளையில் ....நாம், கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் யார்? என அறிந்துகொள்ளலாம்.

நிச்சயமாக ஒரு பிராந்திய சபையில் அதிக அங்கத்தினர்கள் இல்லாதிருந்தால், சபை அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் அறிந்திருப்பார்கள். ஆனால் உள்ளூர் பார்வையாளர்கள் மற்றும் குறிப்பாக மற்ற நகரங்களிலும் நாடுகளிலுமிருந்து வருகின்றவர்கள் அங்கு கூடிவரும் போது அவர்களைக் குறித்த காரியம் என்ன? பிராந்திய அங்கத்தினர்கள் அவர்களை சந்திப்பதற்கும் அவர்கள் அங்கத்தினர்களா அல்லது அங்கத்தினர் அல்லாதவரா என்பது பற்றி அறிந்து கொள்வதற்கும் நல்ல வாய்ப்பு கிட்டவில்லையென்றால் என்ன செய்வது? அறியப்படாத

விருந்தாளிகள் புறக்கணிக்கப்படுகையில் அங்கத்தினர்களென கண்டறியப்பட்டவர்களுக்கு மட்டும் திருவிருந்து பரிமாறப்படுமா அல்லது பங்குகொள்ளும்படிக்கு எல்லாருக்கும் நல்ல வாய்ப்பளிக்கப்படுமா?

சபை அங்கத்தினர்கள் மட்டுமே திருவிருந்தில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவேண்டும் என சிலர் எண்ணுகின்றனர். இந்த வழக்கம் "நெருக்கமான ஐக்கியம்" ஆக ஒப்பிடப்படுகிறது, அதாவது கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொள்ளுதல் அந்நியர்களுக்கு அடைக்கப் பட்டதாயிருக்கிறது. அறியப்பட்ட சபை அங்கத்தினர்கள் மட்டும் இதில் பங்கு கொள்ளலாம் ஆனால் நெருக்கமான ஐக்கியம் பயிற்சிக்கப்படும் போது, சில சபை அங்கத்தினர்கள் கூட வெறுமனே ஆராதனையில் கலந்து கொண்டு திருவிருந்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் புறக்கணிக்கப்படலாம், ஏனென்றால் சபை ஊழியம் செய்பவருக்கு அவர்கள் அறிமுகமாகாதவராயிருக்கின்றார்கள். திருவிருந்தானது கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயிருப்பவர்களுக்கு மட்டுமே பரிமாறப்பட வேண்டியது என்பது உண்மையாகும். ஆனால் கிறிஸ்தவரல்லாதவர்கள் புசித்தால் என்ன செய்வது? இக்கேள்விக்கு விடையாக நான் இவ்வினா எழுப்புகிறேன்: திருவிருந்தில் பங்குகொள்ளும் தகுதியுடையவர் யார் என நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை மனிதருக்கு யார் கொடுத்திருக்கிறார்? நிச்சயமாக, ஒருவன் சபை அங்கத்தினனாக இல்லாவிட்டால் அல்லது அவிசுவாசமுள்ள அங்கத்தினனாக இருந்தால் அவன் இதில் பங்குகொள்ளக்கூடாது என நாம் அறிவோம்; ஆனால், திருவிருந்தினை புசிக்க விருப்பமுள்ள ஒருவனுக்கு பரிமாற மறுப்பதற்கு நாம் யார்? இவைகள் சம்பந்தமாக நாம் விசுவாசமிக்க கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும் எனக்கருதினால், நாம் அவர்களுடைய இருதயங்களை அறியமுடியாது. நம்முடைய அறிவுக்கு எட்டாமல், சிலர் தங்களுடைய வாழ்வில் ஒழுக்கமற்றவர்களாகவும், கடன்களை அடைக்கத் தவறியவர்களாகவும், தங்களுடைய இருதயத்தில் பாவம் நிறைந்த மனநிலையை உடையவர்களாகவும், குடும்ப தவறுகளினாலும் அல்லது நாம் அறியாத மற்ற காரியங்களில் நிலைத்திருப்பதினால் வேத வாக்கியங்களின்படி கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளாத நிலையில் இருக்கலாம். ஒரு

மனுஷனும் மற்ற மனுஷனுடைய இருதயத்தை நியாயந்தீர்க்கமுடியாது.

இக்கேள்விகள் அனைத்திற்கும் பதில் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, பவுல் சொன்ன வார்த்தைக்கு செவி சாய்க்கவேண்டும், "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக்குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்புவரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" (1கொரி.11:27-29). நாம் கேள்விப்படுகின்ற இக்கூற்றானது ஒரு மிகப்பெரிய விதி என நான் நினைக்கிறேன்: அதாவது தனிப்பட்ட ஒருவனை சோதிப்பது நமக்குரியதல்ல, ஆனால் அந்த தனிப்பட்ட ஒருவன் தான் பாத்திரவானா அல்லது அபாத்திரவானா என்பதைக்குறித்து வேதவாக்கியம் போதிக்கிறபடி தன்னைத்தானே சோதித்தறிய வேண்டும். நம்முடைய வேலை போதிக்க வேண்டியதே அதன்பின் ஒவ்வொருவனும் அவனுக்குள் அல்லது அவளுக்குள் கர்த்தருடைய திருவிருந்தில் அவர்கள் பங்குகொள்ளலாமா என்பது பற்றி தீர்மானித்துக் கொள்ளட்டும். ஒருவனை திருவிருந்தில் பங்குகொள்ளாதபடி நாம் தடுப்போமானால் அவர்கள் புண்படுத்தப்பட்டு மேற்கொண்டு சொல்லப்படும் போதனைக்கு செவிசாய்க்க மறுத்துவிடுவார்கள். அவர்கள் அவிசுவாச அங்கத்தினராயினும் அல்லது அங்கத்தினரல்லாதவராயினும்,அதில் பங்குகொள்வார்களானால், அவர்கள் இதுகுறித்து தொடர்ந்துபோதிக்கப்பட்டு அதன்பிறகு கடைசியாக அவர்கள் சத்தியத்தைக் குறித்த அறிவை அடைந்து தங்களுடைய நிலையை சரிசெய்து கொள்ளுவார்கள். ஒருவன் விசுவாசமில்லாத அங்கத்தினராயிருந்து கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகொண்டு வந்தால், நாம் பொறுப்புடையவர்களாயிருக்கிறோம். நாம் அந்த தனிப்பட்ட நபரிடம் சென்று, அன்பின் வழியில் அவனை (அல்லது அவளை) தன்னுடைய வாழ்விலுள்ள பாவத்தைச் சரிசெய்து அதன்பிறகே ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக தகுதியான முறையில் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ள வேண்டுமென ஊக்கப்படுத்தவேண்டும்.

அத்தோடுகூட, ஒருவன் கர்த்தருடைய சபையில் அங்கத்தினனாக மாறுவதற்கு ஒருபோதும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவனாக இருந்தாலும்கூட, அவன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு வருகின்ற அந்த நபரை நாம் அறிந்திருந்தால், இது நாம் அந்த நபரிடம் சென்று, அவனோடு ஒரு வேதவகுப்பினை ஒழுங்குப்படுத்துவதற்கு நமக்கு ஒரு நல்ல வாய்ப்பினைத் தருகிறது. ஒருவேளை சேர்ந்து வேதத்தைக் கற்றுக்கொள்ளுவதின் மூலம் அவன் அல்லது அவள் கர்த்தருடைய பந்தியில் புசிப்பதற்கு கர்த்தர் திட்டமிட்டிருக்கிற நோக்கம் முழுவதையும் கற்றுக்கொள்ளமுடியும்.

பவுல் ஒருவன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுவதற்கு முன் தன்னைத் தான் சோதித்தறிய வேண்டுமென சொல்லியபோது, அவன் மற்ற எவரைக்காட்டிலும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகிறவர்களுக்கே ஒருவேளை அறிவுறுத்தினார் என்று நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும் என நான் கருதுகிறேன். ஒருவரும் நம்முடைய இருதயத்தின் கிரியைகளை அறியமுடியாது. தேவனுக்கு முன்பாக ஒரு உத்தமமான சோதித்தறிதலை உருவாக்குவதும் எதுவெல்லாம் தவறானதாயிருக்கிறது என நாம் கண்டு சரிசெய்வதும் நம்முடைய கடமையாயிருக்கிறது.

கர்த்தருடைய பந்தி ஒவ்வொரு வாரமும் கிறிஸ்துவினுடைய மாபெரும் தியாகபலிக்கு நம்முடைய ஒப்புக்கொடுத்தலை புதுப்பித்துக்கொள்வதற்கும் நாம் உண்மையாகவே கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கிறோமா அல்லது இல்லையா என அறிந்து கொள்வதற்கும் நமக்கு நல்லவாய்ப்பளிக்கிறது. நாம் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுவதற்கு (யோவா. 4:24) நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இல்லையென்றால், நாம் ஒவ்வொரு வாரமும் தேவையான சீர்திருத்தலை உருவாக்கும்படிக்கு ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்.

நீங்கள் கிறிஸ்தவரா? ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகிறீர்களா? அவற்றினால் நீங்கள் பெலனடைந்திருக்கிறீர்களா? இவ்வழியில் கர்த்தரை நினைவுகூருவதன் மூலம் அவரை மகிமைப்படுத்துகிறீர்களா?

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவா.6:54).

பெண்கள் பகுதி

# ஏப்படி நாம் அவரை அணிந்துகொள்வது?

## *How do We Wear Him?*

*-Betty*



வேதம், ஒருபுறம் கிறிஸ்தவன் கிறிஸ்துவை தரித்துக் கொண்டிருப்பவனாகவும், ஞானஸ்நானத்தில் அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டவனாகவும், அவருடைய நீதியை அணிந்து கொண்டிருப்பவனாகவும் இருக்கிறான் என்று போதிக்கின்றது. நமது தினசரி வாழ்க்கையைப்பற்றிய காரியத்தில், மக்கள் நம்மையல்ல, நமது நடக்கையில் கிறிஸ்துவை பார்க்கிறவர்களாயிருக்கவேண்டும்.

இன்னொரு புறம் வேதமானது, கிறிஸ்து கிறிஸ்தவனுக்குள் வாசம்பண்ணுகிறார் எனக்கூறுகிறது. "...விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்" (எபே.3:17). இதன் பொருள், நாம் என்னசெய்தாலும், எங்கெல்லாம் சென்றாலும், நம்மோடு கிறிஸ்துவை எடுத்துக்கொண்டவர்களாய் அதாவது அவர் நமக்குள் இருக்கிறவராய் இருக்கவேண்டும் (ரோமர்8:9,10).

☆ நமது கோபத்தின் ஆவேசத்தை, தீயகுணத்தை, எரிச்சலை, கெட்ட வார்த்தையை, வாழ்வில் எழக்கூடிய பிரச்சனைகளுக்கு உலகப்பிரகாரமாக மறுமொழி கூறுவதை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியப்பண்ணுகிறோமா?

☆ உலகப்பிரகாரமான பழக்க வழக்கங்களாகிய மதுபானம் பண்ணுவதற்கும், புகையிலை போன்ற போதை பொருட்களுக்கும், வேறே தீயகாரியங்களுக்கும் நமது சரீரத்தை (நமக்குள் வாசம்பண்ணுகிற கிறிஸ்துவை) தவறாகப் பயன்படுத்துகிறோமா?

☆ கர்த்தர் தெரிந்துகொள்ளாத இடத்திற்கு கிறிஸ்துவை எடுத்துக்கொண்டு செல்லலாமா?நாம், அன்பின் தேவன், உடன்பங்காளி, ஆராதனைக்குரியவர், நன்மைசெய்கிற கர்த்தர் தங்கவிரும்பும் ஆலயமாக நம்மை மாற்றுகிறோமா?

☆ அல்லது மேற்கூறிய உலகப்பிரகாரமான காரியத்தில் அதாவது அவர் நமது கிரியைகளினால் தொடர்ந்து வேதனைப்படும்படி அவித்துபோடுகிறோமா? அவர் நம்மோடு வாசம்பண்ணுவாரா அல்லது நாம் அவரை வெளியேற்றுகிறோமா?

# கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்

## If The Lord Be God, Follow Him

*-Glory Arjunan*



அன்பான சகோதரிகளே, இன்று ஆவியானவர் நம்மை நோக்கி அறைகூவலிடும் இச்சத்தத்தை நம்மால் உணர முடிகிறதா? இன்றைய கிறிஸ்தவ சகோதரிகளுக்கு இது மிகத்தேவையான ஒரு அறைகூவல் என்றே எண்ணுகிறேன்.

அன்றைய நாளில் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி எலியா தீர்க்தரிசி "...நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்..." என்றான். ஆம் சகோதரிகளே, கிறிஸ்தவர்கள் என்ற சொல்லிக்கொண்டு அநேகர் இவ்விதமாகத்தான் குந்திக்குந்தி நடக்கிறார்கள். கர்த்தரை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று இருதயத்தில் விசுவாசித்து, அறிக்கையிட்டு ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்த அன்று முதல் கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவை உடையவர்கள் என்று உன்னத நிலைக்கு வந்து விட்டு இன்று குந்தி குந்தி நடப்பது ஏன்? காரணம், உலகக் காரியங்கள், இனம், ஜனம், ஜாதி, நிறம், பணம் என்ற பல வகையான உருவில் அநேகரை இருமனமுள்ளவர்களாக குந்திக் குந்தி நடக்கப்பண்ணுகிறதாய் இருக்கிறது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து நான் உலகத்தானல்லாதது போல நீங்களும் உலகத்தாரல்ல என்கிறாரே! அவரை வஞ்சிக்க நினைக்கலாமா?

கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம் உண்மையான முழு மனதுடன் கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூர்ந்து அவரை பின்பற்றுகிறவர்களாய் இருப்பதையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். கர்த்தரை நம் தெய்வமாய் கொண்டிருந்தோமானால் அவரை பின்பற்றுவோம். எப்படி?


"கொரி.6:14-18 முடிய உள்ள வசனங்களில், அந்நிய நுகத்திலே விசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே, ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து

புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்கள் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறதே.

இப்படியிருக்க அன்பு வாலிப சகோதரியே, உன் எதிர்காலத்தை குறித்து என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்? அவிசுவாசிக்கும், விசுவாசியாகிய உனக்கும் சம்பந்தமில்லையே. தேவன் அவ்விதமான சம்பந்தத்தை அல்லது திருமண உறவை நிச்சயமாகவே அங்கீகரிக்கமாட்டாரே. கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூருவாயானால் அவரது கற்பனைகளைக் கைக்கொள் (1யோவா.2:6). அவிசுவாசியாகிய ஒரு நபரை உன் வாழ்க்கைத் துணையாக அடைய விரும்பாதே. ஒரு வேளை உன் வீட்டில் எழுந்துள்ள கட்டாயத்தின் பேரில் அவ்விதமான துணையை ஏற்கத்துணியாதே, மனுஷருக்கு பயப்படுவதைப் பார்க்கிலும் கர்த்தருக்குப் பயப்படு. கர்த்தர் உன்னை உயர்த்துவார். நீ ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம் என்பதை மறந்து அந்த ஆலயத்தை கெடுத்து விடாதே. கிறிஸ்து இயேசுவுக்காக பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்.

அன்பான தாய்மார்களே! உபாகமம்7:2-4 முடிய உள்ள வசனங்களில் "....அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்கு கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" என்று எழுதியிருக்கிறதே. இப்படியிருக்கும் போது நம் ஜனம், ஜாதி நம்மை ஒதுக்கி விடுமே அல்லது ஏளனமாய் பேசுவார்களே என்று சொல்லி உங்களது பிள்ளைகளுக்கு அந்நியரிடத்தில் சம்பந்தம் கலக்க நினைக்கிறீர்களா? வேண்டாம். கர்த்தரை தெய்வமாகக் கொண்ட ஜனமே பாக்கியமுள்ளது. ஒரு வேளை கர்த்தரின் கட்டளையை மீறுவோமானால் ஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களா யிருப்போம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம் பண்ணுவோம்" என்று இயேசு கூறுகிறார் (யோவா.14:23). ஆம், அன்பான சகோதரிகளே, கர்த்தர் தெய்வமானால் அவரை முழுமனதோடு பின்பற்றுவோம். சுதந்திரமாக கர்த்தரை பின்பற்றும் இந்நாட்களில் சமுதாயத்தைக் கண்டு பயப்படவேண்டாம். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, தானியேல் போன்றோரை தப்புவித்து காத்து ரட்சித்த கர்த்தர் நம்மையும்

அவ்விதமாக காத்து ரட்சிப்பார். அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபே.5:7,8). கர்த்தர் உங்களை பெலப்படுத்துவாராக!



"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்"
(நீதி.16 : 2)

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்" (1யோவான்5:21)

## ஜெபியுங்கள்




- ✦ஒரிசாவில் தாக்கப்படும் கிறிஸ்தவ குடும்பங்களுக்காக ......
- ✦இந்தியாவில் வன்முறையை தூண்டும் வன்முறையாளர்கள் மனமாற ....
- ✦நாங்குநேரி கூட்டங்களுக்காக மற்றும் 25,26,27 தேதிகளில் நடைபெறும் கூட்டங்களுக்காக ......
- ✦கிறிஸ்துவின் வசனம் மாத இதழ் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கிறிஸ்துவின் சபை எழும்ப ....

## சபையைக் கட்ட ஒரு வழிகாட்டி

## A Guide to Build the church

நெகேமியா புஸ்தகத்தில் எருசலேமின் அலங்கங்கள் திரும்ப கட்டப்படுவதில் இஸ்ரவேல் ஜனங்களின் வேலையைப் பற்றி வாசிக்கிறோம். இன்று கர்த்தருடைய சபையை வெற்றிகரமாகக் கட்டும் பணியில் நாம் நியமிக்கப்பட்டவர்களாயிருப்போமானால் அவர்களுடைய வழிகாட்டுதல் நமக்கு உதவிசெய்யும். தயவு செய்து அவர்களுடைய வேலையை கவனியுங்கள்.



- ✔ அவர்கள் ஜெபித்தார்கள்
- ✔ அவர்கள் தங்கள் வேலையைத் திட்டமிட்டார்கள்
- ✔ அவர்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தினார்கள்
- ✔ அவர்கள் குறைகூறுவதை அசட்டை செய்தார்கள்
- ✔ அவர்கள் ஒவ்வொருவரும் வேலையில் தங்களை இணைத்துக்கொண்டார்கள்
- ✔ அவர்களுக்காக தேவன் யுத்தம் செய்து அவர்களோடிருந்தார் என்பதை நினைவுகூர்ந்தார்கள்

-selected

# தேவன் செய்ய நினைத்த காரியம் தடைபடாது

*-Daniel Dhurairajan*

ஒரு ஊரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தார்கள். ஒருவன் வயதானவன். இன்னொருவன் வாலிபன். இருவரும் அந்த தேசத்து ராஜாவினிடத்தில் போய் ஏதாவது பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொரு தடவையும் ராஜா அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யும் போது, வாலிபன் ராஜா இதை செய்தாரென்று சொன்னான், வயதானவனோ, "கர்த்தர் செய்தார்" என்றான். ராஜாவுக்கு சரியான கோபம். இதை நான் செய்தேனா? அல்லது ஆண்டவன் செய்தானா? என்பதை இவனுக்குப் புரிய வைக்க வேண்டுமென்று நினைத்தான். அப்படியாக ஒரு தடவை இருவரும் பிச்சையெடுக்க வந்தபொழுது, அவர்களை பார்த்து, நீங்கள் வழக்கமாக போகும் பாதையில் போகவேண்டாம் வேறொரு பாதையை சொல்லி அதில் போகும்படியும் வாலிபன் முதலில் போன பின்பு சிறிது நேரம் கழித்து வயதானவனை போகும்படியும் சொன்னான். அப்படியே அந்த பாதையில் ஒரு பையில் பொன்னாபரணங்களை கட்டி போட்டுவிடும்படி தன் சேவகர்களுக்கு கட்டளையிட்டான்.

வாலிபன் திரும்பி போகும்போது, ராஜா இந்த புதிய பாதையில் ஏன் போகச் சொன்னாரென்று இப்பொழுதுதான் தெரிகிறது. எந்த சந்தடியுமில்லை நன்றாக காற்று வருகிறது, போக்குவரத்தேயில்லை அமைதியான பாதை நாம் இதில் கண்களை மூடிக்கொண்டே போகலாம் என்று சொல்லிக் கொண்டு கண்களை மூடிக்கொண்டே நடந்தான். சற்று நேரம் கழித்து வந்த வயதான பிச்சைக்காரன் ரோட்டில் ஏதோ மூட்டை கிடப்பதைப் பார்த்து எடுத்துப் போய் பிரித்தால், நகைகள் சந்தோஷப்பட்டு ஆண்டவருக்கு நன்றி சொன்னான். அடுத்தமுறை ராஜா இருவரையும் அழைத்து வாலிபனை பார்த்து கேட்டான். நேற்று போன பாதை ஆசீர்வாதமாக இருந்ததா? ஆம்! நல்லா இருந்தது, அமைதியாயிருந்தது. கண்ணை மூடிக்கொண்டே கூட போய்விடலாம் நானும் கண்களை மூடிக்கொண்டே போய்விட்டேன் என்றான்.

வயதானவனைப் பார்த்து கேட்டான் ராஜா, அதற்கு அவன், நான் போய் கொண்டிருக்கும்போது ஒரு சிறிய மூட்டை கிடந்தது அதை எடுத்துக் கொண்டு போய் வீட்டில் பிரித்து பார்த்தேன். அதற்குள் நகைகள் இருந்தது. "கர்த்தர் கொடுத்தார்" என்றான். ராஜாவுக்கு மீண்டும் கோபம் வந்தது.

நான் கொடுத்தேனா? கர்த்தர் கொடுத்தாரா? என்று புரியவைக்க வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை ஒரு தர்பூசணிபழத்தை அறுத்து அதற்குள் வெள்ளி நாணயங்களை நிறைத்து பிச்சையெடுக்க வந்த வாலிபனிடம் கொடுத்தான். 'வீட்டில் போய் அறுத்து சாப்பிடு' என்றான். வாலிபனுக்கு ஒன்றும் புரியாமல் அதை தூக்கிக் கொண்டு நடந்தான். அப்படி வரும் வழியில் ஒரு பழ வியாபாரியை சந்தித்தான். அவனிடம் சில வெள்ளிப் பணத்துக்கு விற்று விட்டு இன்றைக்கு இதுதான் வருமானம் என்று போய்விட்டான். பழ வியாபாரி அந்த பழதை எடுத்துக்கொண்டு போகும் போது வயதான பிச்சைக்காரன் வெயிலில் வருவதைப் பார்த்து, மனம் நெகிழ்ந்து அந்தப் பழத்தை கொடுத்து வீட்டுக்கு போய் நீ அறுத்து சாப்பிடு என்றான். பெற்றுக் கொண்டு போய் அறுத்த முதியவருக்கு ஒரே ஆச்சர்யம் அத்தனையும் வெள்ளிப்பணம்.

ராஜாவிடம் வந்த இருவரையும் பார்த்த ராஜா வாலிபனை அர்த்தத்தோடு விசாரித்தான். என்னப்பா நேற்று நல்ல வருமானமா? போங்க ராஜாவே வழக்கமாக கிடைக்கிறதை விட குறைவாக இரண்டு வெள்ளிப்பணம்தான் கிடைத்தது. நீங்கள் கொடுத்த தர்பூசணி பழத்தை பழ வியாபாரியிடம் கொடுத்து இரண்டு வெள்ளிப்பணத்தை வாங்கினேன் இதுதான் வருமானம் என்றான்.

முதியவரை பார்த்த ராஜாவுக்கு அதிர்ச்சி. முதியவர் ரொம்ப சந்தோஷமாக இருந்தார். அவரை விசாரித்தான் ராஜா. நேற்று நான் மதியம் வந்துட்டு இருந்தேன் ஒரு பழ வியாபாரி என் மேல் இரக்கம் வைத்து ஒரு தர்பூசணி பழத்தை கொடுத்தார், அதை வீட்டுக்குப்போய் அறுத்து பார்த்தால் அத்தனையும் வெள்ளிப்பணம். "கர்த்தர் கொடுத்தார்" என்று சத்தமாக சொன்னான்.

ராஜாவின் முகம் வெட்கத்தால் சுருங்கி போனது. ராஜாவுக்கே இப்பொழுது ஒரு உண்மை தெரிய வந்தது.

***"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு42:2).***

**கிறிஸ்துவின் வசன மாத இதழ் வளர்ச்சிக்கு உதவ**
**முன் வருகிறவர்கள் கவனத்திற்கு**

உங்களுடைய உதவியை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ **THE WORD OF CHRIST** என்ற பெயரில் அனுப்பி வைக்கவும்.

Editor
**THE WORD OF CHRIST**
P.O.BOX 5, Batlagundu-624 202,S.INDIA.

## வேதஅறிவுப்போட்டி எண் 96-ல் வெற்றிபெற்றவர்கள்

G.A. ஜான்சன் -தலைமலைப்பட்டி
IRA. எத்திராஜன் -சங்கரி
J. ஐசக் -வண்ணார்பேட்டை
J. ஜாஸ்மின் -ஓசூர்
K.M. ஜான் -ஜெயங்கொண்டம்
N. ஜான் செல்லையா -மதுரை
P. அலிஸ்மேரியம்மாள் -வத்தலக்குண்டு
S. பாக்கியராஜ் -திண்டுக்கல்
C. ஜாய் கிறிஸ்டினா -நாகமலை(மதுரை)
Mrs. மெர்சி டக்லஸ் -கோவை
Tmt. மரகதம் திரவியம் -கோம்பை
Mrs. மெல்சிடா -திண்டுக்கல்
E. ஜோசப் தேவதாஸ் -நாகமலை(மதுரை)
D. யேசுதாஸ் -சித்தூர் (ஆந்திரா)
K. மோகன் -கொமாரபாளையம்
K. நளினி ஜெயகுமார் -கிருஷ்ணாம்பாளை
R. சாமுவேல் -ஊதியூர்
G.P. ஏசையன் -கோபி
G.P. கிப்ட் ராஜாமணி -ஒட்டானாதம்
N. விஜயநாதன் -கொ.பாளையம்
R. கஸ்தூரி -ஒட்டானாதம்
G.P. டேவிட் -கள்ளிக்குடி
S.சசி குமார் -மணலி
S. ஜெபெஃர்சன் எட்பெர்க் பாண்டியன் - காளையார்கோவில்
N.கமலவேணி - சென்னை
Mrs.எஸ்தர் பியூலா அன்பரசி - சித்தார்பட்டி
A.J.தினகரன் -நாராயணபுரம்
Mr.இவான்லெண்டில் பாண்டியன் - மறவமங்கலம்
K.விமலா -வேலம்பாளை
M.இராஜேஸ்வரி -சிக்கல்
N.கவிதா செல்வகுமார் -மதுரை
S. தண்டபாணி -சிலுவத்தூர்
J. நிர்மலாஜான் -மதுரை
G.பூங்கோதை -வெள்ளபாளை

## வேதஅறிவுப்போட்டி எண் 96-ன் விடைகள்

1. வைரமாக்கினார்கள் -சக.7:12
2. வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார் - எபி.12:26
3. மாயை -பிர.8:14
4. இராது -1யோ.1:10
5. பரிசுத்தமுள்ளவர் -சங்.99:9
6. மாசில்லாத சுத்தமான -யாக்.1:27
7. நிந்தையும் -நீதி.18:3
8. எரிந்து உருகிப்போம் -2பேது.3:12
9. தள்ளுபடியாவீர்கள் -மல்.2:3
10. இயேசுவுக்கு -1பேது.1:21

## நடப்புச் செய்திகள்

☆ அண்ணா பிறந்தநாளான செப்.15 முதல் தமிழகத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணிநேரம் இயங்கும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

☆ ஓய்வின்றி உழைப்பதில் இந்தியர்கள் முதலிடம். 62 வயதுக்குப்பிறகே ஓய்வு பெற விரும்புகின்றனர்.

☆ தொடக்கப்பள்ளி முதல் பிளஸ்2 வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகள் பாடங்களை எளிதாக கற்கவும், பார்த்து புரிந்துகொள்ளவும் வசதியாக ஆங்கிலம் மற்றும் அறிவியல் பாடங்களுக்கான 'சிடி'க்கள் அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

☆ விருதுநகரில் டாடா நிறுவன சிறப்பு மண்டலம் அமைய உள்ளது.

☆ 12-ம் வகுப்பு படிக்கும் ஸ்ருதி சென்னை பள்ளி மாணவி வடதுருவத்துக்கு பயணம்.

# தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்?

# Why Did God Make Women?

**-Nancy Wheat**



தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்? தேவன் எந்த உயிரினங்களையும் நோக்கமில்லாமல் அல்லது காரணமில்லாமல் உண்டாக்கினாரா? நிச்சயமாய் இல்லை! நாம்முடைய தேவன் ஒரு மாபெரும் சிருஷ்டிகர்; அவர் ஒவ்வொரு சிருஷ்டியையும் ஒரு அற்புதமான நோக்கத்துடன் சிருஷ்டித்திருக்கிறார். ஆகவே, மிக அதிகமாய், மனுஷியானவள் அற்புதமான தெய்வீக நோக்கத்துடன் உருவாக்கப்பட்டாள் இது மனுஷியின் நோக்கம் யாதென நான் நினைப்பது முக்கியமல்ல. இது எந்தவொரு மனிதனுடைய யோசனை என்னவென்பதும் முக்கியமல்ல. நாம் நிறைவு செய்ய வேண்டிய நோக்கம் தேவனுடைய நோக்கம் என்பதே முக்கியம்.

ஆதியாகமம் இந்த ஆச்சரியமான உலத்தினை தேவன் சிருஷ்டித்த சம்பவத்தைப் பற்றி கூறுகிறது. ஒவ்வொரு தாவரமும், பறக்கும் பறவையும் மிருகமும் இந்த அற்புதமான சிருஷ்டிப்பில் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது. மனுஷனுடைய நோக்கம் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்துவதும் காப்பதுமாகும் (ஆதி.2:15). இது காண்பதற்கு ஒரு குடியானவனுடைய வாழ்க்கையை சித்தரிக்கும் செயலாயிருந்தது, ஆனால் தேவனாகிய கர்த்தர், "........ மனுஷன் தனிமையாயிருப்பது நல்ல தல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). பிறகு தேவனாகிய கர்த்தர் இன்னொரு அற்புதத்தை நிகழ்த்தினார்: அவர் ஆதாமுடைய "ஏற்றதுணை" -ஆக மனுஷியை உண்டாக்கினார். தேவனாகிய கர்த்தர் மனுஷியை உண்டாக்கும் வரை மனுஷன் முழுமைபெறவில்லை, சிருஷ்டிப்பு முழுமைபெறவில்லை. அங்கே சிருஷ்டிப்பில் ஒன்றும் மனுஷியைப் போலில்லை. மனுஷியுடைய நோக்கத்தினை வேறு எந்த சிருஷ்டியும் நிறைவு செய்யமுடியாது. "இவள் என் எலும்பில் எலும்பும்,

என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" என ஆதியாகமம்2:23,24 கூறுகிறது. இந்தப் பகுதி தொடர்ந்து, "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" எனக் கூறுகிறது. மனுஷியின் நோக்கம் மனுஷனுடைய துணையாக இருப்பதே ஆகும். சமுதாயத்தின் மிக அடிப்படை அமைப்பான குடும்பங்களை உருவாக்கவே மனுஷனையும் மனுஷியையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார். குடும்பம் அமைதியாக செயல்படுவதில் நாம் ஒருவருக்கொருவர் உதவுகிறவர்களாயிருக்க வேண்டும். எப்படியாகிலும் மனுஷனாகவும் மனுஷியாகவும் நம்முடைய கடமைகள் வித்தியாசமானவை. இயேசு தம்முடைய கிரியையை நிறைவேற்றும் படிக்குப் பூமிக்கு வந்திருக்கையில் தேவன் பரலோகத்தில் வீற்றிருப்பது போல, ஒவ்வொருவரும் வேறுபட்ட கடமையினைக் கொண்டிருக்கிறனர், ஆகவே மனுஷனும் மனுஷியும் குடும்பத்தில் வித்தியாசமான கடமைகளைக் கொண்டுள்ளனர்.

மிருகங்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை இயற்கை சுபாவத்தின் மூலம் நிறைவேற்றுகின்றன. கற்றுக்கொள்ளக் கூடியவைகளாயிருந்தாலும் அவைகள் நாம் செய்கின்றவைகளே. எபே.5:21-23, மற்றும் 1பேது.3:1-9 போன்றவை மனைவிகள் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கும்படி கூறுகிறது. கீழ்ப்படிந்திருத்தல் என்பது "அன்புடனே புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல்" அல்லது "புருஷனுடைய முடிவெடுத்தலில் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தல்" என்பதாகும். பெண்களே, பிலிப்பியர்2:5-8ஐ வாசித்து பிறகு இயேசுவில் நீங்கள் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா எனத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். கீழ்ப்படிதல் அடிமையாயிருப்பது அல்லது கொடுமையாக நடத்தப்படுவது என பொருள்படாது. இயேசு தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு அன்புடனே கூடிய கீழ்ப்படிதலோடு ஒப்படைத்தார்.

நாம் நம்மை நம்முடைய புருஷரின் ஆளுகைக்கு ஒப்படைக்கக் கடவோம். ஆம், அநேக புருஷர்கள் கிறிஸ்து சபையில் அன்புகூருகிறது போல தங்களுடைய மனைவிகளிடத்தில் அன்புகூரும் தங்களுடைய கடமையினை நிறைவேற்றுகிறதில்லை, ஆனால் இது நம்முடைய கடமையினின்று நம்மை விடுவிக்கிறதில்லை. இப்படிப்பட்ட புருஷரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு 1பேதுரு 3, "...... பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி,

மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்" எனக்கூறுகிறது. "........ பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்தபுத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக் கிறவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர் களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும் ..." தீத்து2:3-5 ஸ்திரீகளுக்குக் கூறுகிறது. ஏன்? "அப்போது தான் தேவவசனத்தை ஒருவரும் தூஷிக்கமாட்டார்கள்" கிறிஸ்தவர் களாகிய நாம் தேவனுடைய வசனம் தூஷிக்கப்பட ஒருபோதும் இடமளிக்காமலிருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியம் இந்த விருப்பத்தைப் பற்றிக்கொள்ளுகிறதா? தேவன் நம்முடைய குடும்பங்களுக்கென்று கொடுத்த மாதிரியின்படி நாம் ஒருவருக்கொருவர் வாழ்வில் உதவும்படிக்கு புருஷர், மனைவிகளுமாக நாம் சேர்ந்து ஜெபிக்கக்கடவோம்.

**புருஷர்களே, மனைவியானவள் பலவீனப்பாண்டமாயிருக் கிறபடியினால், நீங்கள் உங்கள் மனைவிகளை அன்புடன் நடத்துவீர்களானால், அவர்கள் உங்களுடைய ஆளுகைக்கு எளிதாகக் கீழ்ப்படிந்திருப்பார்கள்.**

| இயேசுவின் அற்புதங்கள் | அதன் அர்த்தங்கள் |
|---|---|
| 1. தண்ணீர் திராட்ச இரசமானது யோவான்2:1011 | 1. நித்திய வாழ்க்கைக்கு ஆதாரம் இயேசுவே |
| 2. ஒருவனுடைய குமாரன் சுகமானது யோவான்4:46-54 | 2. நித்திய வாழ்க்கைக்கு அடிப்படை விசுவாசம் இயேசுவே |
| 3. பெதஸ்தா வியாதிக்காரன் சுகமானது யோவான்5:1-9 | 3. நித்திய வாழ்க்கைக்கு ஆரம்பம் இயேசுவே |
| 4. 5000 பேர் அப்பம் சாப்பிட்டது யோவான்6:1-14 | 4. நித்திய வாழ்க்கைக்கு ஆகாரம் இயேசுவே |
| 5. தண்ணீர்மேல் நடந்தது யோவான்6:15-21 | 5. நித்திய வாழ்க்கைக்கு அச்சாணி இயேசுவே |
| 6. குருடன் பார்வையடைந்தது யோவான்9:1-41 | 6. நித்திய வாழ்க்கைக்கு ஒளி இயேசுவே |
| 7. லாசரு உயிர்த்தெழுந்தது யோவான்11:1-44 | 7. நித்திய வாழ்க்கைக்கு அதிவெற்றி இயேசுவே |
| 8. திரளான மீன் பிடிக்கப்பட்டது யோவான்21:1-14 | 8. நித்திய வாழ்க்கைக்கு ஆசீர்வாதம் இயேசுவே |

மனைவிகளே, நீங்கள் சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்தது போல நீங்கள் பயபக்தியோடு, அன்புகூர்ந்து உங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் உங்களிடத்தில் விவேகத்துடன் நடந்து கொள்வது அவர்களுக்கு எளிதாய்க் காணப்படும்.

சிந்தியுங்கள், நம்முடைய ஜீவியத்தை மேற்கொள்ளும் சாத்தானுடைய வல்லமையோடு போரிடும்படிக்கு நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்கின்றவர்களாயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறவர்களாக மற்றவரை குற்றப்படுத்தி நம்முடையதை நியாயப்படுத்திக் கொள்ளும்போது, சாத்தான் வெற்றி கொள்ளுகிறான். சாத்தான் உங்களுடைய குடும்பத்தைக் கட்டுப்படுத்த இடமளிக்காதிருங்கள்.

'ஒரேவழி' தபால் வழி பாடத்தை உங்கள் திருச்சபையில் அறிமுகம் செய்ய விரும்புகிறோம். விருப்பமுள்ள சபை ஊழியர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். இயேசு ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை அதே போல் நாங்களும் ஒருவரையும் புறம்பே தள்ளுவதில்லை.

## தெரிந்து கொள்ளுங்கள்

எகிப்து நாட்டில் பழங்காலத்தில் இறந்து போன மன்னர்களின் உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்து வந்தனர் . இது போல பதப்படுத்தப்பட்ட மனித உடல்களில் பல அங்கு கண்டு பிடிக்கப்பட்டன. பிரான்சு மற்றும் எகிப்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் நடத்திய ஆய்வில் 50 'மம்மி'களை கண்டுபிடித்தனர். கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய ஆயிரம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த இந்த மம்மிகள் கெய்ரோ அருகே சக்காரா என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் கண்டு எடுக்கப்பட்டன. இவை சணல் துணியால் சுற்றப்பட்டு கல்லால் அல்லது மரத்தாலான சவப்பெட்டியில் வைத்து மூடப்பட்டு இருந்தன.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்" (எபிரெயர்1:1,2)

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -11

சரித்திர ஆய்வு

## மண்ணின் மன்னர்கள் - விண்ணின் பரமவேந்தன்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



தேவசாயலாகவே, தேவனால் உண்டாக்கப்பட்ட மானிடர்களை தேவ வழி நடத்திட முற்பிதாக்களாகிய ஏனோக் நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, ஆரோன், யோசுவா போன்றோர் தேவ கட்டளைகளை கேட்டறிந்து, தம்மைப் போலவே அனைத்து மக்களினம் நீதி, நேர்மையாய் வாழ்ந்திட போதித்து, அவ்வாறே வாழ்ந்தனர் அதன் பின் பல நியாயாதிபதிகள் ஒத்தினியேல் முதல் சாமுயேல் வரையில் நியாயம் விசாரித்தனர். அதன் பிறகு மக்களிடையே பேரும், புகழும், பதவியும், உலக சிற்றின்ப வாழ்வு என வாழ்ந்திடவும், மக்களின் மீது ஆட்சிபுரியும் படியாக ஒவ்வொருவரும் அரசனாக ஆசை கொண்டனர், ஆனாலும் கி.மு.*1619*-ல் மோசே எகிப்தின் அரண்மனையில் சகல ஞானமும், கல்வியும் கற்று, செல்வ செழிப்பான இவ்வுலக வாழ்வை வாழவிரும்பாமலும், அவைகள் அநித்தியமான பாவ சந்தோஷம் என்றும் தம்முடைய இனமக்களுடன் துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டதுமின்றி அன்றைய எகிப்தின் அரண்மனை பொக்கிஷமாகிய பிளாட்டினம், தங்கத்தை வேண்டாமென வெறுத்தான்.

இன்றைக்கும் தென்னிந்திய மக்களின் அனுதின தேவையானது தங்கம். 1டன் நல்ல தங்கம் எகிப்து நாட்டிலிருந்து தான் வருகிறது! உலகிலேயே நல்லதரமான பொன் எகிப்தில் கிடைக்கிறது. அந்த இடம் **Gold Coast** தங்க கடற்கரை என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அரசனாக வேண்டியவன் மீதியானில் ஆடுகளை மேய்த்தான் *(எபி.11:25,26) 370* ஆண்டுகளுக்கு பிறகு வாழ்ந்த கிதியோனின் வெற்றியை கண்ட இஸ்ரயேலர்கள் கிதியோனை நோக்கி, "நீர் எங்களை மீதியானியர்களுக்கு நீங்கலாக்கி விட்டபடியினால் (கி.மு.*1249*-ல்) நீரும், உம்முடைய குமாரனும் உம்முடைய குமாரனின் குமாரனும், எங்களை ஆளக்கடவீர்கள் என்றார்கள். அதற்கு கிதியோன் நான் உங்களை ஆளமாட்டேன், என் குமாரனும் உங்களை ஆள மாட்டான் கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான் *(நியா.8:22,23)*. ஏனெனில் உண்மையான

தேவ பயமுள்ளவர்கள், தொடக்க காலமுதல் கடைசிமட்டும் மெல்கிசேதேக்கின் முறையின்படி பெரிய நியாயாதிபதியாக வரும், "அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார் (சங்கீதம்110:6). "...அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணிவேன். அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணி பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்" எரேமி23:5. (கி.மு.600) என கூறப்பட்டது.

"...இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமா யிருக்கிறார்..." சகரியா9:9 இது (கி.மு.487-ல் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டது).

இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார் ஏசா.32:1 (கி.மு.713). இவ்வாறான தேவ வார்த்தைகளை கேட்டறிந்து விசுவாசத்துடன் காத்திருந்தனரே!

கி.மு.1689 முன்னரே "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதில்லை ... ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் என முதன் முதலாக வரப்போகிற ராஜாவை குறித்து கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை மக்களினம் மறந்து, தங்களை மேன்மை படுத்திக் கொள்ள விரும்பியதுடன் அரசனானார்கள். மேலும் இயேசுகிறிஸ்து ராஜாவாயிருப்பார் என சங்கீதம்45,72,110 அதிகாரங்களிலும் 132:11,17,18 வசனங்களிலும் இறுதியாக அவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார் வெளி.17:14 என்பதையும் கருத்தாய் காண்போம்.

**சீடர்கள் அறிந்த ராஜா:** "அந்திரேயா, தன் சகோதரன் சீமோனை கண்டு மேசியாவைக் கண்டோம் என்றான் யோவா1:40-41. "...கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (யோவா.12:13). "சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார்" (வசனம் 15). இயேசுகிறிஸ்து தாமே கூறினார். "...என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல... (யோவா.18:36). "...நான் ராஜா தான் ; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்..." வசனம்37. ஆதாம் முதற்கொண்டு இன்று வரை மரித்த 7500 கோடி மக்களின் பாவங்களையும், உலகமுடிவு பரியந்தம் வாழ்வோர்களின் பாவ மன்னிப்பை அளிக்கவல்லவரும் இரட்சகரும், சமாதான ராஜாவாகிய இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்காக காத்திருந்தபோது, பிலாத்துவின்

மனைவியின் ஆலோசனையை அறிந்து இயேசு இரட்சகரை விடுதலை செய்ய வகை தேடினான் யோவா.19:12; லூக்.23:20. ....என் ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல என்று கேட்ட பிலாத்து, இவர் உலக பிரகாரமான ராஜாவோ ரோமருக்கு எதிரான ஆட்சியை அமைக்கப்போகிறவர் அல்லவா என்பதை அறிந்தும், திரள் கூட்டமக்களை பிரியப்படுத்த அவர்கள் கேட்டுக்கொண்டபடியே இயேசுவை சிலுவைக்கு அனுப்பினான்.

**இன்றைய மக்கள் பார்வையில் இயேசு ராஜா:** இன்றும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளம் ஒரு சில கூட்டத்தினர், இயேசுகிறிஸ்து திரும்பவும் இவ்வுலகிற்கு வந்து 1000 ஆண்டுகள் இப்பூமியில் ஆட்சிபுரிவார் என்று கருதுவதுடன், மற்றவர்களையும் இதனை நம்பச் செய்கின்றனர்.

"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே (பரலோகத்தில், இப்பூமியில் அல்ல) அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன்..." (வெளி.3:21). நமக்கு சிங்காசனம் ஆயத்தாமாயிருக்கிறது ஆனால், "பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன் (என்னை மகிமைப்படுத்தவிரும்பவில்லை) நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் என்றார் (யோவா.17:4). அவரைபோல நாமும் தேவனுக்கேற்ற கிரியை செய்து முடிப்போம்.

**சிங்காசனத்தைண்டையில் சந்திப்போம்**

**"இயேசு ராஜா என்னை ஆளும் நேசா என பாடுவோம்"**

## ஆசிரியர் கடிதம்

**வாசகர்களுக்கு,**

**இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை நீங்கள் வாசித்து வருவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம். உங்களுடைய முகவரியில் மாற்றம் இருந்தாலோ அல்லது இடம் மாறிவிட்டாலோ உடனே எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.**

**இவ்விதழில் வெளிவந்துள்ள செய்திகள் அது சம்பந்தமான உங்களுடை கருத்துக்கள் இருந்தால் தொலைபேசி மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்த மறவாதீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். படித்துவிட்டு மற்றவர்களுக்கும் இவ்விதழை கொடுத்து உதவுங்கள்.**

**உங்கள் பகுதியில் கிறிஸ்துவின் சபை இல்லையென்றால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்.**

சிறுவர் பகுதி

## எதிராளிகளுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க சொன்ன எலிசா

**வேதபகுதி: 2இராஜாக்கள் 6:9–23**

இஸ்ரவேலின் ராஜாவுக்கு எலிசா தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டு வந்தான். இதனால் இஸ்ரவேலின் ராஜா மிகவும் எச்சரிக்கையாயிருந்தான். இந்தக் காரியத்தினிமித்தம் சீரியராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று கேட்டான். அதற்கு அவன் ஊழியக்காரரில் ஒருவன்; ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான். அப்படியானால் அவனைப் பிடிக்கும்படி நீங்கள் போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள் என்று சொல்லி, இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்து கொண்டார்கள். எலிசாவின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில் இதோ, இராணுவமும் குதிரைகளும் பட்டணத்தைச் சுற்றி இருக்கக் கண்டு ஐயோ, என் ஆண்டவனே என்ன செய்வோம் என்றான். அதற்கு எலிசா என்ன சொன்னான் தெரியுமா? பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர் களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். உடனே எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.

பின்பு சீரிய இராணுவம் அவனிடத்தில் வருகையில், எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி; இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்தார். அப்பொழுது எலிசா அவர்களை பார்த்து: இது வழி அல்ல இது பட்டணமும் அல்ல; என் பிறகே வாருங்கள் நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் உங்களை அழைத்துச் செல்வேன் என்று சொல்லி சமாரியாவுக்கு அழைத்து சென்று பின்பு கர்த்தரை நோக்கி ஜெபித்து இவர்கள் பார்க்கும்படி செய்யும் என்றான். அப்படியே அவர்கள் பார்த்து சமாரியா என்று கண்டார்கள். இஸ்ரவேலின் ராஜா உடனே இவர்களை வெட்டிபோடலாமா என்று கேட்டான். அதற்கு எலிசா நீ வெட்டவேண்டாம். இவர்கள் புசித்து குடிக்க அப்பமும் தண்ணீரும் வையும் என்றான். அந்தப்படியே பெரிய விருந்து பண்ணி அவர்கள் புசித்துக் குடித்த பின்பு அவர்களை தங்கள் ஆண்டவனிடத்திற்குப்போகும் படி அனுப்பி விட்டார்கள். அதன் பின்பு சீரியரின் தண்டுகள் இஸ்ரவேலின் தேசத்திலே அப்புறம் வரவில்லை. நாமும் நமக்கெதிராக வரும் சத்துருக்களை சபிக்காமலும் அவர்களை அழிக்காமலும் எலிசாவைப்போல அவர்களுக்கு ஆகாரம்கொடுத்து அனுப்புவோம்.

*மனப்பாட வசனம் : "...உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனம் கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" (ரோமர் 12:20)*

## வேத அறிவுப் போட்டி எண்.97

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.**

1. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் எப்படிப்போகும்?
2. ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு என்ன சொல்லாமலும் இருங்கள் என்கிறார் அப்போஸ்தலனாகிய யோவான்?
3. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் எப்பொழுதே சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
4. மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள் என்று எந்த அப்போஸ்தலன் எழுதுகிறார்?
5. ஒரு நாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே என்ன உண்டாகும்?
6. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே என்னசெய்வான் என்று ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறார்?
7. இகழ்வோரை அவர் இகழுகிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ எதை அளிக்கிறார்?
8. நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் என்னவாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
10. யோவானாகிய நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட எதைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது?

**"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 10:42).**

**BATLAGUNDU CHRUCH OF CHRIST** **ஆராதனை நேரம்**



Meets Here

ஞாயிறு காலை 8.30 மணி

தேவனை ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்ள யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

17-2-102 D/5, Rajan Nagar
Batlagundu - 624 202,
Dindigul Dist

**உங்கள் வானொலியில்** இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**

**TAMILAN TV** - Every Monday 6.00 a.m. **VASANTH TV** - Every Tuesday 6.30 a.m.
**IMAYAM** - Every Thursday 6.15 a.m.

**மாத இதழ் மற்றும் வேதபாடம்** தேவைக்கு உடனே ரூ. 15/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

Radio &TV யில் வெளி வந்த தேவ செய்திகள் அடங்கிய CD & DVD க்கள் விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் ரூ.100/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

# THE WORD OF CHRIST

P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041
E-mail : thewordofchrist@sancharnet.in

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**மாத இதழின் ஆண்டு சந்தா**

இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24, Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan

**RNI No.TNTAM/2000/3629 Postal Registration No. TN/SR/DDL/164/2006-2008 Licensed to Post without** prepayment License No. TN/WPP-25/SR/ 2006 - 2008
Posted at Batlagundu Post Office 10th September 2008

To

**Monthly Magazine**

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India